அன்புள்ள பெற்றோர்/ பராமரிப்பாளர்

சமீபத்தில் நடந்த அதிர்ச்சிகரமான சம்பவம் எங்கள் பாடசாலை மாணவர்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதித்திருக்கலாம். இந்த துயர சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்கள் மற்றும் நண்பர்களுடன் எங்களின் ஆதரவு எண்ணங்கள் உள்ளன.

இன்றும் வரவிருக்கும் வாரங்களிலும், நீங்களும் உங்கள் பிள்ளையும் பல வழிகளில் பாதிக்கப்படலாம், ஏனெனில் ஒவ்வொருவரும் வித்தியாசமாக எதிர்வினையாற்றுவார்கள். சிலர் மிகவும் உணர்ச்சிவசப்படலாம், சிலர் இதைப்பற்றி பேச விரும்பலாம், மற்றவர்கள் பேச விரும்ப மாட்டார்கள். காலப்போக்கில் எதிர்வினைகள் மாறலாம், இது போன்ற ஒரு சம்பவத்திற்கு இது வழமையான ஒன்றுதான். உங்கள் பிள்ளை/பிள்ளைகள் அவர்களின் கவலைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் எந்த நேரத்திலும் அதனை கேட்க நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

பிள்ளைகள் மற்றும் இளைஞர்களிடம் ஊக்குவிக்கவேண்டிய இரண்டு முக்கியமான செய்திகள்:

- நாம் அனைவரும் மனநிலை தாழ்வாக அல்லது பதிப்பிற்குள்ளாகக்கூடியவராக இருக்கும் போது மற்றவர்களின் உதவியை நாட வேண்டும்
- நீங்கள் ஒரு நண்பரைப் பற்றியோ அல்லது உங்களைப் பற்றியோ கவலைப்பட்டால், நம்பகமான பெரியவர் ஒருவரிடம் சொல்வது முக்கியம்.

மேலும் தகவலுக்கு, இணைக்கப்பட்டுள்ள ‘பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் அதிர்ச்சிகரமான நிகழ்வுகளைச் சமாளிக்க உதவுதல்’ தகவல் தளைப் பார்க்கவும். தேவை ஏற்பட்டால் அதில் பட்டியலிடப்பட்டுள்ள உதவி சேவைகளில் ஏதேனும் ஒன்றை அணுகுமாறு நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.

பாடசாலை மனநல ஆலோசனை ஊழியர்களின் ஆதரவுதவி உட்பட, கூடுதல் ஆதரவுதவிக்கான பல்வேறு வசதிகள் எங்கள் பாடசாலையில் கிடைக்கின்றன. தேவைப்பட்டால், உங்கள் பிள்ளைக்கு கூடுதல் ஆதரவுதவிப் பெற, உங்கள் பிள்ளையின் அதிபரைத் தொடர்பு கொள்ளவும்.

பாடசாலையைத் தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற எண்ணை அழைக்கவும், உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதை தொலைபேசி இயக்குனரிடம் கூறி, பாடசாலையை அழைக்கச் சொல்லவும். உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ, தொலைபேசி இயக்குனர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

தங்கள் உண்மையுள்ள

அதிபர்